பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

20 03 2024 **WEDNESDAY** **12.40 PM**

ஆகாஷ்வாணி

தலைப்புச் செய்திகள்

1. மக்களவை முதற்கட்ட தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் இன்று தொடங்கியது.
2. தமிழகத்தில் மக்களவைத் தேர்தலில் போட்டியிடும் திமுக, அஇஅதிமுக வேட்பாளர் பட்டியல் இன்று வெளியிடப்பட்டுள்ளன.
3. ஹாங்காங்கின் புதிய தேசிய பாதுகாப்பு மசோதா கவலை அளிப்பதாக உள்ளது என்று ஐ நா தெரிவித்துள்ளது.
4. உலக சிட்டுக்குருவிகள் தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.
5. சுவிஸ் ஓபன் பேட்மிண்டன் போட்டியின் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு இந்தியாவின் திரிஷா ஜோலி – காயத்ரி கோபிசந்த் இணை முன்னேறியுள்ளது.

------ *இனி விரிவான செய்திகள்* ---

<<<<<<<>>>>>

மக்களவை முதற்கட்ட தேர்தலுக்கான முதல்கட்ட வேட்புமனு தாக்கல் இன்று தொடங்கியது.

17 மாநிலங்கள் மற்றும் 4 யூனியன் பிரதேசங்களைச் சேர்ந்த 102 தொகுதிகளுக்கு ஏப்ரல் 19ஆம் தேதி வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது.

இதையொட்டி, தமிழகத்தில் 39 தொகுதிகள், ராஜஸ்தானில் 12 தொகுதிகள், அருணாச்சலப் பிரதேசம், மணிப்பூர் மற்றும் மேகாலயாவில தலா 2 தொகுதிகள், உத்ராண்ட், அஸ்ஸாம் மற்றும் மகாராஷ்ட்ராவில் தலா 5 தொகுதிகள், பீகாரில் 4 தொகுதிகள், மத்தியப்பிரதேசத்தில் 6 தொகுதிகள், மேற்குவங்கத்தில் 3 தொகுதிகளில் வேட்புமனு தாக்கல் இன்று தொடங்கியது.

இதேபோல், சத்திஷ்கர், மிஸோராம், நாகாலாந்து, சிக்கிம், திரிபுரா, அந்தமான் நிகோபார், ஜம்மு காஷ்மீரில் தலா ஒரு தொகுதி, மற்றும் லட்சத்தீவுகள், புதுச்சேரிக்கான வேட்புமனு தாக்கலும் இன்று ஆரம்பமானது.

தமிழகத்தின் விளவங்கோடு சட்டப்பேரவை தொகுதி இடைத்தேர்தலுக்கான வேட்புமனு தாக்கலும் இன்று தொடங்கியது..

இந்த தொகுதிகளில் வேட்புமனுக்களை தாக்கல் செய்வதற்கான கடைசி நாள் 27ஆம் தேதி ஆகும்.

விடுமுறை நாட்கள் தவிர மற்ற நாட்களில் வேட்புமனுக்கள் பெறப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

வேட்புமனுக்கள் மீதான பரிசீலனை 28 ஆம் தேதி நடைபெறும்.

மனுக்களை திரும்பப் பெற வரும் 30ஆம் தேதி கடைசி நாளாகும்.

பீகார் மாநிலத்தில் மட்டும் வேட்புமனுக்களை தாக்கல் செய்வதற்கான கடைசி நாள் இம்மாதம் 28-ஆம் தேதியாகும்.

இதேபோல, வேட்புமனுக்களை திரும்பப்பெறுவதற்கான கடைசி நாள் அடுத்த மாதம் 2-ஆம் தேதி என்று தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

<<<<<<<>>>>>

வேட்புமனு தாக்கல் இன்று தொடங்கிய நிலையில், தமிழகத்தின் பிரதான கட்சிகளான திமுக, அஇஅதிமுக-வும் வேட்பாளர் பட்டியலை இன்று வெளியிட்டுள்ளன.

திமுக தலைவரும், முதலமைச்சருமான திரு மு.க.ஸ்டாலின், சென்னையில் இன்று 21 பேர் அடங்கிய திமுக வேட்பாளர் பட்டியலை வெளியிட்டார்.

அப்போது, திமுக தேர்தல் அறிக்கையையும் திரு மு.க.ஸ்டாலின் வெளியிட்டார்.

சென்னை ராயப்பேட்டையில் செய்தியாளர்களை இன்று சந்தித்த அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி, 16 பேர் அடங்கிய முதல்கட்ட வேட்பாளர் பட்டியலை வெளியிட்டார்.

மதிமுக, இந்திய கம்யூனிஸ்ட், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், விடுதலை சிறுத்தைகள் உள்ளிட்ட கட்சிகள் ஏற்கனவே வேட்பாளர்களை அறிவித்துள்ளன.

பிஜேபி தலைமையிலான கூட்டணியில் பாமக, தமிழ் மாநில காங்கிரஸ், அமமுக, உள்ளிட்ட கட்சிகள் இடம்பெற்றுள்ளன.

இதில் பாமக-வுக்கு 10 தொகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

பிஜேபி தலைமையிலான கூட்டணியில் தொகுதி பங்கீடு விரைவில் இறுதி செய்யப்படும் என்றும், வேட்பாளர்கள் போட்டியிடும் தொகுதிகள் அறிவிக்கப்படும் எனவும் அக்கூட்டணி சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<<>>>>>

தெலங்கானா மாநில முன்னாள் ஆளுநரான டாக்டர் தமிழிசை சௌந்தரராஜன் இன்று மீண்டும் பிஜேபி-யில் இணைந்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று, அக்கட்சியின் மாநிலத் தலைவர் திரு அண்ணாமலை முன்னிலையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், அவர் இத்தகவலை வெளியிட்டார்.

<<<<<<<>>>>>

பார்சி புத்தாண்டான **Navroz** இன்று கொண்டாடப்படுவதையொட்டி, பிரதமர் திரு நரேந்திர மோடி, மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக, அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், வரும் ஆண்டானது சமூகத்தில் ஒற்றுமையை மேம்படுத்துவதுடன், வளர்ச்சியையும், வெற்றிகளையும் கொண்டுவரட்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.

வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியில், பார்சி புத்தாண்டில் மகிழ்ச்சியும், வளமும் பெருகட்டும் என்று தெரிவித்துள்ளார்.

<<<<<<<>>>>>

இந்தியாவின் புத்தாக்கத் தொழில் சூழல் அமைப்பு இதுவரை இல்லாத அளவிற்கு முன்னேற்றத்தை கண்டுள்ளதாக பிஜேபி மூத்த தலைவரும், பிரதமருமான திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற ஸ்டார்ட் அப் மகாகும்ப் நிகழ்ச்சியில் பங்கேற்ற அவர், 2047-ஆம் ஆண்டில் இந்தியா வளர்ச்சியடைந்த நாடாக மாறுவதில் இந்த நிகழ்ச்சி முக்கிய பங்காற்றும் என்று தெரிவித்தார்.

கடந்த பத்தாண்டுகளில் தகவல் தொழில்நுட்பம், மென்பொருள் துறையில் இந்தியா வளர்ச்சி கண்டு வருவதாகவும், புத்தாக்க தொழில் நிறுவனங்களின் வளர்ச்சியை மக்கள் கண்டு வருவதாகவும் கூறினார்.

வேளாண்மை, ஜவுளி, மருத்துவம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இன்று புத்தாக்க தொழில் நிறுவனங்கள் வெற்றி கண்டு வருவதில் தாம் மகிழ்ச்சி அடைவதாக திரு நரேந்திர மோடி குறிப்பிட்டார்.

<<<<<<<>>>>>

இந்தியாவில் நடைபெறும் 18-ஆவது மக்களவைத் தேர்தல் உலகின் மிகப்பெரிய தேர்தல் செயல்பாடாக இருக்கும் என்று பிஜேபி-யின் மூத்த தலைவரும், வெளியுறவுத்துறை அமைச்சருமான டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

தென்கொரியாவின் சியோலில் நடைபெற்றுவரும் மூன்றாவது ஜனநாயக உச்சிமாநாட்டில் காணொலி வாயிலாக அவர் பங்கேற்று பேசினார்.

ஜனநாயகப் பூர்வமான உரையாடலில் இளையோரின் பங்கு முக்கியம் என்றும் இந்தியாவில் வாக்களிப்பதற்கான வயது 18-ஆக உள்ளது எனவும் அவர் கூறினார்.

மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களை பயன்படுத்துவது இந்த தேர்தல் செயல்பாட்டின் வெளிப்படைத்தன்மையை பிரதிபலிப்பதாக திரு ஜெய்சங்கர் தெரிவித்தார்.

<<<<<<<>>>>>

உணவு பதப்படுத்துதல் தொழில்துறையின் கூடுதல் பொறுப்பினை மத்திய அமைச்சர் திரு கிரண் ரிஜிஜு வகிப்பார் என்று குடியரசுத் தலைவர் மாளிகை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ராஷ்ட்ரிய லோக் ஜனசக்தி தலைவரான திரு பசுபதி குமார் பராஸ் அப்பொறுப்பினை ராஜினாமா செய்ததையடுத்து, இம்முடிவு அமல்படுத்தப்பட்டுள்ளதாக அதில் கூறப்பட்டுள்ளது.

<<<<<<<>>>>>

ஜார்கண்ட் ஆளுநரான திரு சி பி ராதாகிருஷ்ணன் இன்று தெலங்கானா ஆளுநராக கூடுதல் பொறுப்பை ஏற்றுக்கொண்டார்.

ஹைதராபாத் ஆளுநர் மாளிகையில் இன்று நடைபெற்ற விழாவில், தெலங்கானா உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி திரு **'Alok Aradhe '**, அவருக்கு பதவி பிரமாணம் செய்துவைத்தார்.

<<<<<<<>>>>>

ஹாங்காங்கின் புதிய தேசிய பாதுகாப்பு மசோதா கவலை அளிப்பதாக உள்ளது என்று ஐ நா தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக, ஐ நா மனித உரிமைக்கான உயர் ஆணையர் **Volker Turk** வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், இம்முடிவு சீனாவின் ஆளுகைக்கு உட்பட்ட அப்பகுதியில் மக்களின் அடிப்படை உரிமைகளை பறிப்பதாக அமையும் என்று தெரிவித்துள்ளார்.

அவசரமாக நிறைவேற்றப்பட்டுள்ள இந்த சட்டத்திருத்தமானது மனித உரிமைகள் குறித்து கவலை அளிப்பதாக உள்ளது என்று அந்த செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

<<<<<<<>>>>>

தங்கக்கடத்தலில் தொடர்புள்ளதாக குற்றம் சாட்டப்பட்டுள்ள நேபாள கம்யூனிஸ்ட் கட்சியின் துணைத்தலைவர் திரு கிருஷ்ண பகதூர் மஹாரா அந்நாட்டு காவல்துறையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்வழக்கு தொடர்பாக, அவர் கைது செய்யப்பட்டுள்ள நிலையில், கட்சி பொறுப்பிலிருந்து அவரை நீக்குவது தொடர்பாக, அக்கட்சி சார்பில் நேற்று ஆலோசனைக்கூட்டம் காட்மாண்டுவில் நடத்தப்பட்டது.

இதில் முடிவு ஏதும் எட்டப்படவில்லை என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<<>>>>>

கேரளாவில் நேரிட்ட சாலை விபத்தில் ஒரு குழந்தை உட்பட நான்கு பேர் உயிரிழந்தனர்.

இடுக்கி மாவட்டத்தின் மாங்குளம் பகுதியில், வேன் ஒன்று ஓட்டுநரின் கட்டுப்பாட்டை இழந்து, பள்ளத்தில் கவிழ்ந்து விழுந்ததால் இந்த விபத்து நேரிட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இந்த விபத்தில் காயமடைந்த 13 பேர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

<<<<<<<>>>>>

உலக சிட்டுக்குருவிகள் தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது. சிட்டுக்குருவிகளின் எண்ணிக்கை அண்மைக் காலங்களில் குறைந்து வரும் நிலையில் அது தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தி, சிட்டுக் குருவிகளைப் பாதுகாக்க கடந்த 2010-ம் ஆண்டு முதல், ஒவ்வொரு ஆண்டும் இந்த தினம் கடைபிடிக்கப்பட்டு வருகிறது.

<<<<<<<>>>>>

மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையம் நடத்தும் குடிமைப் பணிகளுக்கான முதல்நிலைத் தேர்வு ஜூன் 16-ம் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

மக்களவை தேர்தல் காரணமாக தேர்வு அட்டவணையை மாற்றியமைக்க மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையம் முடிவு செய்துள்ளது.

<<<<<<<>>>>>

இந்திய – அமெரிக்க முப்படைகள் பங்கேற்கும் பேரிடர் மீட்பு மற்றும் நிவாரண பயிற்சி விசாகபட்டிணத்தில் தொடங்கியுள்ளது.

டைகர் ட்ரிம்ஃப்-24 எனும் இப்பயிற்சி வரும் 31-ஆம் தேதிவரை நடைபெறுகிறது.

இதில் இருநாடுகளின் முப்படை வீரர்களும் பங்கேற்றுள்ளனர்.

விமானங்கள், கப்பல்கள் ஆகியவையும் இந்த பயிற்சியில் ஈடுபட்டுள்ளன.

பேரிடர் காலத்தில் கப்பல்களை இயக்கும் செயல்முறைகள் மற்றும் மீட்பு செயல்திட்டங்கள் இப்பயிற்சில் மேற்கொள்ளப்படுகிறது.

<<<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

சுவிஸ் ஓபன் பேட்மிண்டன் போட்டியின் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு இந்தியாவின் திரிஷா ஜோலி – காயத்ரி கோபிசந்த் இணை முன்னேறியுள்ளது.

**Basel** நகரில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் மகளிர் இரட்டையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் இந்த இணை 21-15, 21-12 என்ற செட் கணக்கில், அமெரிக்காவின் **Annie Xu – Kerry Xu** இணையை வென்றது.

<<<<<<<>>>>>

லெபனானில் நடைபெற்றுவரும் உலக டேபிள் டென்னிஸ் போட்டியின், ஆடவர் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் ஹர்மித், சத்யன், மனுஷ், ஜீத், மானவ், சினேஹித் ஆகியோர் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

மகளிர் ஒற்றையர் பிரிவில், அர்ச்சனா, தியா, ஸ்ரீஜா, **Ayhika** ஆகியோர் காலிறுதிக்கு முந்தைய சுற்றை எட்டியுள்ளனர்.

கலப்பு இரட்டையர் பிரிவில், மணிக்கா – சத்யன், மானவ் - அர்ச்சனா, மனுஷ் - தியா, **'Poymantee –** ஆகாஷ் இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளன.

ஆடவர் இரட்டையர் பிரிவில் மனுஷ் - மானவ், சினேஹித் - ஜீத், ஆகாஷ் - **Mudit** இணைகள் காலிறுதிக்கு முன்னேறியுள்ளன.

மகளிர் இரட்டையர் பிரிவில், ஸ்ரீஜா – தியா, கிரித்விகா – செலினா, **Ayhika - Poymantee** இணை காலிறுதியை எட்டியுள்ளன.

<<<<<<<>>>>>

தேசிய சீனியர் மகளிர் ஹாக்கிப் போட்டியின் காலிறுதி ஆட்டங்கள் இன்று நடைபெறுகின்றன.

புனேயில் நடைபெறவுள்ள காலிறுதி ஆட்டங்களில் மணிப்பூர் - மகாராஷ்ட்ரா அணியையும், மத்தியப்பிரதேசம் - பெங்கால் அணியையும் எதிர்கொள்கின்றன.

இதேபோல், ஜார்கண்ட் - மிஸோராம் அணியையும், ஹரியானா – ஒடிசா அணியையும் காலிறுதியில் எதிர்கொள்கின்றன.

அரையிறுதி ஆட்டங்கள் நாளை மறுநாள் நடைபெறவுள்ளன

<<<<<<<END>>>>>